பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper அனுபவிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 20 வியாழக்கிழமை (04-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 39

# பன்குளம் விமானப்படை முகாம் புலிகளால் முற்றாக தாக்கி அழிப்பு!

## 4 விமானப் படையினர் பலியாகினர் ஏனையோர் காயத்துடன் தப்பியோட்டம்

சாவகச்சேரி, ஜனவரி. 4

**திருகோணமலை மாவட்டம், பன்குளம் 4 ஆம் வாய்க்கால் பகுதியில் உள்ள ஸ்ரீலங்கா விமானப் படைமுகாம் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளினால் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் நான்கு விமானப் படையினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்.**

இத்தாக்குதலின் போது நவீன ஆயுதங்களை புலிகள் கைப்பற்றியதுடன் குறித்த படை முகாமை முற்றாக அழித்ததுடன் இரண்டு மணி நேரம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

அத்துடன் விமானப்படையினர் தங்கியிருந்த இருபாடசாலைக் கட்டடங்களும் புலிகளினால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன.

கிழக்குத் தாக்குதல்கள் குறித்து ராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா கருத்துத் தெரிவிக்கையில் —

விடுதலைப் புலிகள் தாக்குதல்களை அதிகரித்துள்ளனர் என்றும்—

இது படையினருக்குப் பெரும் சவாலாக உள்ளது என்றும் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டது.

பன்குளம் முகாம் தாக்குதலில் 200 க்கு மேற்பட்ட புலிகள் பங்குபற்றினர் என்றும் இவர்களில் அனேகமானோர் பெண் போராளிகள் என்றும் வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது.

ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இது குறித்து தெரிவிக்கையில் ஒரு விமானப் படை வீரர் கொல்லப்பட்டதாகவும், அதிகாரி உட்பட 12 பேர் காயம் அடைந்ததாகவும் தெரிவித்தது.

(இ-3-7-6)

### போராளி ஒருவர் வீரச்சாவு

திருகோணமலை விமானப் படை முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரத் தாக்குதலில் மேஜர் உதயச்சந்திரன் (றக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம்) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (இ-3)

### யாழ்.மாவட்ட பரீட்சை முடிவு அடுத்தவாரம்

கொழும்பு, ஜன. 4

யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளுக்கான ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சை முடிவுகள் வடக்கு — கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அடுத்த வாரம் அனுப்பப்படவிருப்பதாக பரீட்சை ஆணையாளர் ரசல் குணவர்த்தனா தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் கொழும்பில் வெளியாகியிருந்தன.

(இ-3-10)

### இராணுவத்தின் பாதுகாப்பு வடக்கில் உறுதியில்லை

கொழும்பு, ஜன. 4

வடக்கில் உள்ள இராணுவத்தின் பாதுகாப்பு முழுமையாக உறுதியாக இல்லை

இராணுவத் துருப்புக்களின் பாதுகாப்பு நூற்றுக்கு நூறு வீதம் உறுதியானது என்று சொல்ல முடியாது.

பிரதான இராணுவ முகாமான பலாலிக்கு அருகில் சென்று குண்டுத் தாக்குதல் நடத்தும் அளவுக்கு விடுதலைப் புலிகள் அங்கு ஊடுருவி உள்ளார்கள்.

இராணுவத்தினரின் உழவு இயந்திரம் கண்ணி வெடியில் சிக்கியிருக்கிறது. இத்தகைய சம்பவங்கள் வலிகாமத்தில் விடுதலைப் புலிகள் மறைந்திருக்கிறார்கள் என்பதனையே புலப்படுத்துகிறது — என்று ஏ.எவ் பி. செய்தியாளர் அமல் ஜெயசிங்கா தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை

## நாடு முழுவதும் 139 மாணவர்கள் 4பாடங்களிலும் அதி விசேட சித்தி

### யாழ். மாவட்டத்துக்கு இரண்டாவது இடம்

கொழும்பு, ஜன. 4

1995 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. (உயர்தர)பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 139 மாணவர்கள் நான்கு பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர். இவர்களில் 59 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கொழும்புக்கு அடுத்தபடியாக யாழ்ப்பாண மாவட்டத்திலேயே கூடுதலானவர்கள் அதி விசேட சித்தி பெற்றுள்ளனர். 18 பேர் யாழ். மாவட்டத்தில் நான்கு பாடங்களிலும் அதி விசேட சித்தி பெற்றுள்ளனர்.

பரீட்சை ஆணையாளர் ரசல் குணவர்த்தனா கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 70 ஆயிரத்து 111 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றுள்ளனர்.

மருத்துவதுறைக்கு 11 ஆயிரத்து 78 பேரும் —

பொறியியல் துறைக்கு 3 ஆயிரத்து 914 பேரும் —

வர்த்தகத்துக்கு 20 ஆயிரத்து 777 பேரும் —

கலைத்துறைக்கு 34 ஆயிரத்து 242 பேரும் — தகைமை பெற்று இருக்கிறார்கள்.

1994 ஆம் ஆண்டிலும் பார்க்க இந்த ஆண்டில் 13 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பம் இம்மாதம் 31 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

(இ-3)

## பலாலிக்குள் ஊடுருவி புலிகள் தாக்குதல்

### ஜீப் சேதம்! படையினர் பலர்பலி!!

இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசமான பலாலியில் நேற்றுக் காலை 7.00 மணியளவில் விடுதலைப் புலிகள் ஊடுருவி நடத்திய தாக்குதலில் ஒரு ஜீப் முற்றாகச் சேதமடைந்தது. இத்தாக்குதலின் போது ஜீப்பில் வந்த இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர்.

புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஆயிரம் கூடாரங்களையே எடுத்துவருவதற்கு அனுமதி

### ஐ.நா. தூதரகம் ஏமாற்றம்

வன்னி மாவட்டத்தில் உள்ள அகதிகளுக்கு இருப்பிட வசதி வழங்கும் நோக்குடன் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் எடுத்துவந்த 3 ஆயிரம் கூடாரங்களில் ஆயிரம் கூடாரங்களை மட்டுமே எடுத்துச் செல்ல வவுனியா தடை முகாமில் அனுமதி வழங்கப்பட்டதாக விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து இந்தக் கூடாரங்கள் லொறி மூலம் எடுத்து வரப்பட்டதாகவும்—

தாண்டிக்குளத்தில் வைத்து சோதனையிட்ட படையினர் ஆயிரம் கூடாரங்களை மட்டுமே அனுமதித்ததாகவும்— தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியுள்ளவர்களுக்கு தேவையான புனர்வாழ்வுப் பணியை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மேற்கொள்ள இலங்கை அரசு அனுமதி வழங்கியிருந்தது. (இ-3-6)

தடா சட்டத்தின் கீழ் கைதான

## 9 இலங்கைத் தமிழர் தமிழகத்தில் விடுதலை

சென்னை, ஜன. 4

தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த 9 இலங்கைத் தமிழர்களை தடா சட்ட வழக்குகளை விசாரணை செய்யும் நீதி மன்றம் விடுதலை செய்துள்ளது.

1991 ஆம் ஆண்டு இந்தியக் கடல் எல்லைக்குள் வெடி குண்டுப் பொருள்களைப் படகில் கொண்டு சென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களுள் சென்ற ஆண்டு பெப்ரவரி மாதம் மத்திய சிறையிலிருந்து தப்பியோடி மீண்டும் பிடிபட்ட பாலேந்திரன், சிவத்தம்பி ஆகியோரும் படகின் கப்டன் பாலனும் அடங்குவர் என்றும் —

இந்தப் படகு இந்திய கடல் எல்லைக்குள் இருந்தது என்பதற்கோ, படகில் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்பதற்கோ சான்றுகள் இல்லை என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் கூறினார்.

## வடமராட்சி, தென்மராட்சி பாடசாலைகளை மூடமுடிவு

வடமராட்சி, தென்மராட்சி கல்விக் கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளை மறு அறிவித்தல் வரை மூடிவிடுமாறு கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ளவர்கள் பல பாடசாலைகளில் தங்கியுள்ளதால் கற்பித்தல் செயற்பாட்டுக்கு தடையாக இருப்பதாக பாடசாலை அதிபர்கள் தெரியப் படுத்தியதற்கமைவாக மறு அறிவித்தல் வரை பாடசாலைகளை மூடிவிடுமாறு வலயம் ஒன்று, இரண்டு பணிப்பாளர்கள் கேட்டுள்ளார்கள்.

பாடசாலைகள் மூடப்படுவதால் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 5 வரையான வகுப்புக்களும் இனி நடைபெற மாட்டாது. (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'உதயன்'
பணி சிறப்புற
வாழ்த்துகின்றோம்
ராஜன்
வீடியோ மூவி சென்ரர்
பிரதான வீதி, — பருத்தித்துறை.
(40054)

இளைய தலைமுறையினரின்
இன்றைய நாளிதழான
'உதயன்'
பணி சிறப்புற
வாழ்த்துகின்றோம்
ராஜன் சைக்கிள் வேக்ஸ்
பிரதான வீதி,
பருத்தித்துறை
(40055)

'உதயன்' இனள நிலையம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
நவ நாகரீக ஆடவர்கட்கு பருத்தித்துறையில்
சிறந்த உடை அமைப்பாளர்கள்
குமார் தையல் நிலையம்
பிரதான வீதி, பருத்தித்துறை.
(40056)

## வடமராட்சி வீதியில் விபத்து அதிகரிப்பு

மந்திகை, ஜன. 4

மக்கள் போக்குவரத்து மிக அதிகமாக இடம் பெறும் பருத்தித்துறை - சாவகச்சேரி வீதி, தற்போது பெய்துவரும் மழைகாரணமாக சேறும் சகதியுமாகி சீரற்றும் காணப்படுகிறது.

இவ்வீதியால் செல்லும் வாகனங்கள் சறுக்கி பல விபத்துக்கள் இடம் பெறுகின்றன.

நேற்று முன்தினம் இந்த வீதியில் வாகனங்கள் சறுக்கி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தவர்களில் இருவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மிருசுவிலைச் சேர்ந்த சின்னப்பு வீனஸ் (வயது 28) புலோலி மேற்கைச் சேர்ந்த சின்னான் வேலுப்பிள்ளை (வயது 80) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

இதே போன்று நேற்று அல்வாய் மாலுசந்தியில் இடம் பெற்ற மினிபஸ் - சைக்கிள் விபத்தில் இளம் பெண் டாக்டர் ஒருவர் காயமடைந்தார்.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும், வதிரியைச் சேர்ந்த டாக்டர் செல்வி அம்பிகாபதி (வயது 28) என்பவரே காயமடைந்தவராவார்.

(இ-15)

## மிதிவெடியில் சிக்கிய சிப்பாய் கால் இழப்பு

சாவகச்சேரி, ஜன. 4

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் மிதிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் தனது காலை இழந்தார்.

★ வெற்றியின் சின்னம்
★ ஈடு இணையில்லாத் தரம்
★ தமிழ் மக்களின் நண்பன்
★ உண்மையின் நாயகன்
★ செய்தியின் உயர்வு
'உதயன்'
தனது கிளை நிலையத்தை
பருத்திநகரில் திறந்து பலவளம்
பெற்று வளர வாழ்த்துகின்றோம்
பருத்தித்துறை
ஐக்கிய விளையாட்டு
கழகம்
(40052)

"உதயன்"
சிறப்புற வாழ்த்துகின்றோம்
அதிருசியான சுத்தமான
★ சிற்றுண்டி வகைகள்
★ வைபவங்களுக்கு தேவையான
தொகையில் உணவுகள் தயாரித்துக்
கொடுப்பவர்கள்.
து. மயில்வாகனம்
★ தேனருவி ★
பிரதான வீதி, பருத்தித்துறை.
(40057)

சேரன்
பல்பொருள்
வாணிபம்
உடுப்பிட்டி
2 ஆம் ஆண்டில்
காலடி வைக்கும் நாளில்
(04 -- 01 -- 1996)
வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது நன்றியைத் தெரிவிப்பதுடன்,
தொடர்ந்தும் உங்களிற்குப் பணி செய்ய
உங்கள் வாழ்த்துக்களையும்,
ஆதரவையும் வேண்டுகின்றோம்,
உங்களின் மகிழ்ச்சி;
எங்களின் வளர்ச்சி.
(சி-3014)

வடமராட்சி
மக்களிற்கு ஓர் நற்செய்தி!
புத்தாண்டில்
சேரன் பல்பொருள்
வாணிபத்தின்
மற்றுமோர் கிளை மந்திகையில்
ஆரம்பம்:
5-1-96 வெள்ளிக்கிழமை
காலை 7 மணி
மந்திகை மருத்துவமனை
நோயாளர்களின் நலன் கருதி
மருந்துப் பொருள்களையும்,
ஊட்டச்சத்துப் பொருள்களையும்
தரமான, மலிவான விலையில்
வழங்க வருகின்றான்.
சேரன்
பல்பொருள்
வாணிபம்
மந்திகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பரவலை முன்னரே கொண்டு வந்திருக்க வேண்டும்

## "ஏசியாரைம்ஸ்" சஞ்சிகைக்கு கதிர்காமர் பேட்டி

கொழும்பு, ஜன. 4
மலேஷியாவில் சிறுபான்மை இனத்தவரிடம் இருந்து அதிகாரப் பகிர்வுக்கான குரல் எழுவதற்கு முன்னரே அதிகாரப் பகிர்வு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதனை இலங்கையில் நீண்டகாலத்துக்கு முன்னர் செய்திருக்கவேண்டும். ஆனால் அதனை நாம் தவறவிட்டுவிட்டோம்.

''ஏசியா ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கண்டவாறு கூறினார்.

மலேஷியாவிலும், எமது நாட்டிலும் சனத்தொகை ஒரே அளவு உள்ளது. அத்துடன் சீனர், மலாயர் என இரு சமூகங்கள் உள்ளன. நாம் தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ளோம். முன்னர் எந்த அரசும் தீர்வு யோசனைகளை முன்வைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

(இ-3)

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு கப்பல் மூலம் பொருள்கள்

## மாஹோவில் எடுத்துவர முயற்சி

கொழும்பில் இருந்து இரண்டாயிரம் மெற்றிக்தொன் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை 'மாஹோ' கப்பல் மூலம் எடுத்துவர ப. நோ. கூ. சங்கங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையால் கடந்த சில மாதங்களாக கப்பல் மூலம் பொருள்களை எடுத்துவரும் பணியை ப. நோ. கூ. சங்கங்களால் மேற்கொள்ள முடியாதிருந்தது.

'மாஹோ' கப்பலில் உடுபுடைவை, உணவு, பால்மா, சவர்க்காரம் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவதற்காக ப. நோ. கூ. சங்கங்களைச் சேர்ந்த நால்வர் கொழும்பு சென்றுள்ளனர். (இ-3)

# இப்படியும் திருடர்கள்!

தென்மராட்சி, ஜன. 4
உடுப்பு மாற்ற இடம் கேட்ட நபர் சைக்கிளுடன் தலைமறைவான சம்பவம் புதுவருடத் தினமான திங்கட்கிழமை நுணாவில் கிழக்கில் இடம்பெற்றது.

சம்பவதினம் முன்பின் தெரியாத நபர் ஒருவர் வீடு ஒன்றுக்குச் சென்று உடுப்பு மாற்றுவதற்கு இடம் தருமாறு கேட்டாராம்.

அப்போது வீட்டில் இருந்த பெண்கள் அந்த நபரை வீட்டுக்குள் விடுவதற்கு அஞ்சி வீட்டின் பின்பக்கம் போய்உடுப்பை மாற்றும்படி கூறிவிட்டுவீட்டுக்குள் சென்று விட்டனர்.

பின்னர் சிறிது நேரம் கழித்து அப்பெண்கள் வெளியே வந்து பார்த்தபோது அந்த நபரைக் காணவில்லையாம். ஆனால் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று காணாமற்போய் இருந்தது.

உடுப்பு மாற்றுவதாகக் கூறிய அந்த நபர் வீட்டுக்குள் பெண்கள் போனதும் சைக்கிளுடன் தலைமறைவாகிவிட்டார். (இ- 117)

# ஜனாதிபதியின் திட்டஅமுலாக்கல் ஆலோசகர்

கொழும்பு, ஜன. 4
ஜனாதிபதியின் திட்ட அமுலாக்கல் ஆலோசகராக திரு. எஸ். சிவதாசன் ஜனவரி முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-3)

# படையினரின் கெடுபிடிகள்: தமிழ்க்கட்சிகள் கவலை

கொழும்பு, ஜன. 4
வடபகுதிக்கு வெளியே செல்வோர் மீது கடுமையான கெடுபிடிகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருவது குறித்து கொழும்புத் தமிழ்க் கட்சிகள் கவலை தெரிவித்துள்ளன.

பாதுகாப்பைக் காரணம் காட்டி இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் கஷ்டப்படுகின்றனர் என்றும் —

வவுனியாவுக்கு அப்பால் செல்லும் மக்கள் மீது அரசு விதித்துள்ள கடுமையான கெடுபிடிகளை தளர்த்த வேண்டுமென தாம் ஏற்கனவே ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி இருப்பதாகவும் —

அந்தக் கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தெரிவித்தனர் என்று வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-7)

# வடக்கின் கல்வி குறித்து கல்விமான்கள் ஆராய்வு

## கொழும்பில் சம்மேளனம் அமைப்பு

கொழும்பு, ஜன. 4
வடமாகாண தமிழ் சமூகத்தின் நீண்டகால பெருமைக்குரிய சிறப்பான கல்வி பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான அத்தியாவசிய நடவடிக்கைகளை கொழும்பில் உள்ள தமிழ்க்கல்விமான்களும், அறிஞர்களும் ஒன்றுகூடி எடுக்க விருக்கின்றனர்.

இதன் முதல்கட்டமாக இவர்கள் வடமாகாணக் கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்களின் சம்மேளனம் ஒன்றை கொழும்பில் ஆரம்பித்துள்ளனர்.

வடக்கில் இன்று உருவாகி உள்ள மோசமான நெருக்கடி நிலையினால் மாணவர்களின் கல்வி பெரும் அளவில் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்தே.

# திருத்தங்களுடனேயே தீர்வுத் திட்டம் தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, ஜன. 4
இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத் திட்டம் இம்மாதம் 16ஆம் திகதி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது என அரசின் மூத்த பிரதிநிதி ஒருவர் தெரிவித்ததாக 'லங்காதீப' தெரிவிக்கிறது.

விரிவான விவாதத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம் தொடர்பாக அரசியல்கட்சிகள் மற்றும் அமைப்புகள் தெரிவித்த ஆலோசனைகள் கவனத்தில் எடுக்கப்பட்டன எனவும்—

பிரச்சினைக்குரிய பல விடயங்கள் திருத்தப்பட்டன எனவும்—

இந்தத் தீர்வுத்திட்டத்தில் சுமார் 10 வீதமான பகுதி இவ்வாறான திருத்தங்களைக் கொண்டுள்ளது எனவும் மேற்குறித்த அரசியல் பிரதிநிதி தெரிவித்தாராம்.

இதன்படி பிரச்சினைக்கு உள்ளானதும் பலரின் மாறுபட்ட கருத்துக்களுக்கு உள்ளானதுமான முக்கியமான மூன்று விடயங்கள் திருத்தங்களுடன் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளன. தெரிவுக்குழுவுக்கு இத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதன் உறுப்பினர்களின் கருத்துக்கள் கவனத்திற்கு எடுக்கப்பட்டு இறுதித் தீர்வு தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்துக்காக நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

தீர்வுத்திட்டம் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டதும் மாகாணசபையைக் கலைக்கும் அதிகாரத்தை மத்திய அரசு இழப்பது, காணிக் கொள்கை ஆகியன தொடர்பாக பலர் எதிர்ப்பைத் தெரிவித்தனர் எனவும்—

அதிகாரத்தைப் பரவலாக்குவது தொடர்பாக இது வரை எந்தக் கட்சியோ, அமைப்போ எதிர்ப்பை தெரிவிக்கவில்லை எனவும் அந்தப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார். (இ-10)

# வாழ்க்கை செலவு சுட்டெண்

கொழும்பு, ஜன. 4
டிசெம்பர் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 1741. 6 ஆகும் இது நவம்பர் மாத சுட்டெண்ணை விட 21. 2 அதிகரிப்பாகும். (இ)

# செட்டிக்குளம் பகுதியில் அகதி முகாம் தீக்கிரை

வவுனியாவில் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள செட்டிகுளம் பகுதியில் தமிழ் அகதிகள் தங்கியிருந்த முகாம் ஒன்று தீக்கிரையானது.

மடு அகதிமுகாமில் இருந்து திரும்பிச் சென்று செட்டிக்குளம் 'மொனிக் மில்' முகாமில் தங்கி இருந்தவர்களுக்கே இந்தக் கதி ஏற்பட்டது.

கடந்த வெள்ளியன்று இந்த முகாமில் தீ பரவியதால் 10 க்கு மேற்பட்ட குடும்பங்களின் உடமைகள் முற்றாக எரிந்து நாசமாகின.

(இ-3)

# ஆஸ்பத்திரி ஊழியருக்கு 3 மாத முற்பணம்

மந்திகை, ஜன. 4
யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கு, சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றுமாத முற்பணம் வழங்கப்படவுள்ளது.

முதலில் ஒன்றரை மாத முற்பணமே வழங்க அனுமதி வழங்கப் பட்டிருந்தது. எனினும் மூன்று மாதங்களுக்கு வழங்குவதற்கான அனுமதி தற்போது அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

# கிளிநொச்சி அரச ஊழியர் சம்பளம் இன்னும் இல்லை

கிளிநொச்சி, ஜன. 4
கிளிநொச்சி மாவட்ட அரச ஊழியர்களுக்கான சம்பளத்துக்கு திரவப்பணம் எடுத்துச் செல்ல இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அரச ஊழியர்களுக்கு டிசம்பர் மாதச் சம்பளம் வழங்க தேவைசான 5 கோடி ரூபா பணத்தை எடுத்து வர அரசு அனுமதிக்கவில்லை என்றும் —

நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள அவர்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# ப.நோ.கூ.சங்க கிளைகள் வன்னிக்கு இட மாற்றம்

சாவகச்சேரி, ஜன. 4
வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சியில் செயற்படும் ப.நோ.கூ. சங்கங்கள் வன்னியில் தமது கிளைகளை ஆரம்பித்துள்ளன.

வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கங்களின் கிளைகளே வன்னியில் இயங்க ஆரம்பித்துள்ளன. (இ-3)

# பற் சிகிச்சை இல்லை

செம்பியன்பற்று, ஜன. 4
மருதங்கேணி ஆதார வைத்தியசாலையில் பற் சிகிச்சை நடைபெறுவதில்லை.

இதனால் வடமராட்சி கிழக்கில் உள்ள மக்கள் பருத்தித்துறை, பளை போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. (இ-36)

# பாதை தெரியாத என் ஊருக்கு....

பலாலி என் ஊராம்;
என் ஊர் எனக்கு
சரியாகத் தெரியாது.
ஐந்து வயதில் நான் அம்மாவுடன்
கையில் காற்சட்டையைப் பிடித்துக்கொண்டு
ஓடிவந்தேன்!
திசை தெரியாதது பயணம்;
என் ஊரை, உறவுகளை விட்டு,
பிரிந்தேன்.
இப்போது யார் எமக்கு உறவு?
நிழலுக்குக் கூட குந்தமுடியாத
மரத்தடியில் ஓர் குடிசை
அமைத்தோம்.
அம்மா அடிக்கடி அழுவாள் — கேட்டால்
இராணுவம் எம் ஊரை
ஆக்கிரமித்து விட்டதாம் என்பாள்.
எனக்குப் புரியவில்லை;
புரியும் வயதுமில்லை.
அம்மாவின் அழுகை என் நெஞ்சை
அடிக்கடி தொட்டுக்கொள்ளும்.
அழகான எம் வீடாம்;
பரந்த நிலப்பரப்பாம்;
இத்தனையும் விட்டுவிட்டு
நாம் இங்கே அகதியாம்!
எப்போது நாம் ஊருக்கு போவோம்
என்று பிதற்றுவாள்.
அகதியென்று யார் சூட்டிய பெயர் எமக்கு?
ஏன் இந்த அவலம் எமக்கு?
தேடினேன் எம் வரலாறுகளை;
சோழப் பேரரசு ஆண்ட
எம் தமிழ் நிலத்தில்
பௌத்த மத பேரினவாதம்
உரிமை கொண்டாடுகிறது; இதனை
அறிந்து கொண்டது என் பருவம்
இதன் பின்னரும் என் கைக்கு
விலங்கு போட்டது யார்?
அம்மாவை விட்டு
விலகிக் கொள்கின்றேன்.
இத்தனை வருடங்கள் வாழ்ந்த
என் அகதி வாழ்க்கையை
அறுத்தெறிகின்றேன்!
போர் முரசு ஒலிக்கின்றது;
ஐந்து வயது கொண்ட
பாலகனல்ல, நான் இன்று
பதினேழு வயதுக்கு வளர்ந்த இளைஞன்
சீருடை தரிக்க நான்
சித்தமாக்கிக் கொள்கின்றேன்.
பாதை தெரியாத என்
ஊருக்கு புறப்பட்டுக்
கொண்டிருக்கின்றேன்!

— த. ராஜா
(போராளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மீண்டும் வலிகாமம் செல்வது அவர்கள் கையிலேயே தங்கியுள்ளது

## தமிழக மாணவனுக்கான அஞ்சலிக் கூட்டத்தில் உரை

எழுதுமட்டுவாள், ஜன. 4

நாம் மீண்டும் எமது இடங்களுக்குச் செல்லும் நாளைத் தீர்மானிப்பது நாங்களல்ல, மக்களே. இன்று நாம் சண்டையிடுகிறோம். நாங்கள் தான் தனித்து நின்று போராட வேண்டும் என்றால் நாளெடுக்கும். நீங்களும் வாருங்கள் விரைவாக எமது இடங்களுக்குச் செல்ல முடியும்.

ஈழத் தமிழருக்காக உயிர்த் தியாகம் செய்து கொண்ட தமிழக மாணவன் அப்துல் ரஹ்மானுக்கு அஞ்சலி செலுத்திப் பேசிய விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த திருமதி தமிழ்க்கவி மேற்கண்டவாறு கூறினார்.

எழுதுமட்டுவாள் சந்தையடியில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் திருமதி தமிழ்க்கவி மேலும் பேசும் போது கூறியதாவது;

சந்திரிகா யார் என்பது தெரியவேண்டும். அவரது உண்மையான உருவம் எது என்பது புரிய வேண்டும்.

நவாலியில் இடம்பெற்ற படுகொலைகளை —

நாகர் கோவிலில் மரணமடைந்த, ஊனமுற்ற சிறார்களை —

திருமணமான முதல்நாளே அரியாலையில் இறந்த தம்பதிகளின் பிணங்களை — பார்த்தால் சந்திரிகாவையும், ரத்வத்தையையும் தெரிந்து கொள்ள முடியும்.

ஏதிலிகளாக மரங்களின் கீழ் வாழும் ஐந்தரை லட்சம் மக்கள் இவர்களை அறிவார்கள்.

எம்.ஜி.ஆர். பேரைச் சுமந்து ஆட்சிக்கு வந்த கன்னடத்தைச் சேர்ந்த ஜெயலலிதா தனது ஆட்சியில் தமிழருக்குத் தமிழகத்தில் இடமில்லாமல் செய்து விட்டார். இவரது ஆட்சியில் இருப்பவர்களோ எமது உடன்பிறப்புக்களான தமிழர்கள்.

விடுதலைப் புலிகளை வளர்த்துவிட்ட இந்திரா காந்தி இருந்த சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார் ஆந்திராக்காரரான நரசிம்மராவ்.

இவர்களது உறவுடன், எம்மை, எமது இனத்தை அழிக்க எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளைக் கண்டு தன்னைத்தானே தீமூட்டிக் கொண்டு இறந்த முகம் தெரியாத அந்தத் தியாகியை நாம் மதிக்கிறோம்.

அப்துல் ரஹ்மான் தமிழரல்லர். தமிழருக்கும் அவருக்கும் உள்ள உறவு தான் அவர் எமது இன்னல்கண்டு தன்னைத் தியாகம் செய்தது.

அதன் மூலம் நாம் படும் துயரங்களை உலகம் அறியச் செய்தவர் அவர்.

எமது மண்ணின் விடுதலைக்காக எண்ணாயிரத்துக்கும் அதிகமான போராளிகளும் நாற்பதாயிரம் பொது மக்களும் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர். இன்று நாற்பதாயிரம் படையினர் இங்கே நிற்கிறார்கள். இவர்கள் எம்மிடம் சிக்கியுள்ளனர்.

நவாலியில், நாகர் கோவிலில், வலிகாமத்தில் நடந்த சம்பவங்களை அப்துல் ரஹ்மான் காணவில்லை. நீங்கள் கண்டவர்கள். சிங்களக் கொடி ஏற்றப்பட்ட போதே நாம் கொதித்திருக்க வேண்டும். எம்முடன் இணையுங்கள். நாம் வலிகாமம் போகப் போகிறோம் ஆயுதங்களுடன்.

இவ்வாறு அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த செல்வி. நிஷாந்தி பேசும் போது இனப் படுகொலையைத் தகர்த்து நாம் சுதந்திர இனமாக வாழ வேண்டும் என்பதற்காகவே இந்தப் போர் நடக்கிறது.

இன்று எம்மை நசுக்க சிங்கள அரசு கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகிறது. இந்தியா அதற்கு உதவுகிறது சாரம் கட்டிய இந்தச் சிறு பொடியனை அழிப்போம் என்று இங்கே வந்த இந்தியப் படையை திறமையும் மதி நுட்பமும் வாய்ந்த எமது தலைமையினால் சிதறடிக்க முடிந்தது.

நமது துயரங்கள், வேதனைகள் கண்டு தன்னையே தீயிட்டுக் கொண்ட தமிழக மாணவனை—

தமிழர்களுக்கு ஒரு நாடு தேவை என்ற அவனது உணர்வை — நாம் ஒருகணம் எண்ணிம்பார்க்க வேண்டும்— என்று தெரிவித்தார். (இ-111)

---

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள சாளி மோட்டார் சைக்கிள், லுமாலா சைக்கிள் விற்பனைக்குண்டு. முகவரி: மகேஸ்வரி வேலுப்பிள்ளை, ''பண்டித வாசா'' கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (சிறுவர் பூங்காவுக்கு முன்பாக) (39785)

இத்தாலி லம்பிறட்டா வெள்ளை நிறம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: நியூமுத்து, இல. 17, நவீன சந்தை மேல்மாடி (உட்புறம்) சாவகச்சேரி. (39902)

### பசு விற்பனை

மூன்று நல்லின பசுக்கள் விற்பனைக்குள்ளன. வாங்க விரும்புவோர் பசுக்களை கீழ்வரும் விலாசத்தில் பார்வையிட்டு 10-01-96ஆம் திகதிக்கு முன் கூறுவிலையை சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (சி-3012)

### தேவை

சுந்தோர் மேசை, இரண்டு லாச்சி மேசை, அலுமாரி, செற்றி, பின்னல் செற்றி செற் தேவை. தொடர்பு: வே. த. மனோகரன், திருக்குற்றாலம், சரசாலை தெற்கு, சாவகச்சேரி. (39784)

### வாடகைக்கு தேவை

ஓய்வுபெற்ற இலங்கை வங்கி மனேஜருக்கு சாவகச்சேரியில் அல்லது சுற்றுப்புற கிராமங்களில் சிறிய வீடு அல்லது அறை வாடகைக்கு தேவை. முற்பணமும் நல்ல வாடகையும் தரப்படும். வி. என். கந்தசாமி, கைதடிச் சந்திக்கு அண்மையில் உள்ள ஒழுங்கையில் Dr. சபாநாதன் வீட்டிற்கு சமீபமாக. (39900)

### இட மாற்றம்

காரைநகர் சிவஸ்ரீ சாம்பசிவ ஐயர் மகன் சோமசபேசக் குருக்கள் (இணுவில் சிவகாமி அம்மன் கோவில் பிரதமகுரு) தற்போது உசன் கந்தசுவாமி கோவிலில் இருக்கின்றார். (39904)

---

## தே. எண்ணெய் விலை ஏற்றம்

கைதடி, ஜன. 4

தேங்காய் எண்ணெய்யின் விலை போத்தல் 150 ரூபாவாக அதிகரித்துள்ளது.

தென்னிலங்கையிலிருந்து இங்கு தேங்காய் எண்ணெய் அனுப்பப்படுவதை அரசு தடைசெய்துள்ளதனால் உள்ளூர் உற்பத்தியையே பாவனையாளர் நம்பியுள்ளனர். (இ-154)

## ஆனையிறவை தாக்க புலிகள் திட்டமாம்

கொழும்பு, ஜன. 4

ஆனையிறவுப் பகுதியில் உள்ள இராணுவ நிலைகள் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக வல்வெட்டித்துறை மற்றும் பகுதிகளில் புலிகள் ஒன்று திரண்டு வருகின்றனர்.

''தசண்டே லீடர்'' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார். (உ)

---

வெளிவருகின்றது

தமிழ்த்தாய் நாட்காட்டி

தவிர்க்க முடியாத சில காரணங்களால் இந்த மாதத்தின் இறுதிப் பகுதியிலேயே

''தமிழ்த்தாய் நாட்காட்டி''

விற்பனைக்கு வரும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(39773)

## அந்தியேட்டி அழைப்பு

திருமதி

**அருளம்பலம் மனோன்மணி**

( சுழிபுரம் மேற்கு )



5 - 12 - 95 அன்று பருத்தித்துறையில் மரணமடைந்த திருமதி அருளம்பலம் மனோன்மணியின் (சின்னத்தங்கம்) ஆத்மா சாந்தியடைய 06 - 01 - 1996 சனிக்கிழமை கரணவாயில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இங்ஙனம்,
கா. அரிச்சந்திரா,

மே/பா V. N. கந்தையா,
குஞ்சர்கடை சந்தி,
வலவன் தோட்டம்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி. (39774)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**குணபாலசிங்கம் கிருபாகர் (G. K)**

1-1-96 அன்று திடீர் மரணமடைந்த யாழ். விவசாயபீட இறுதியாண்டு மாணவன் குணபாலசிங்கம் கிருபாகர் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ். விவசாய பீட இறுதியாண்டு மாணவர்கள்
(39905)

---

## பற்றைக்குள் ஆணின் சடலம்

தென்மராட்சி, ஜன. 4

வரணி நாவற்காடு பற்றைக்காட்டுக்குள் 40 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் அழுகிய நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

சடலத்தில் அடி காயங்களுக்கான அடையாளம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் இலகுவில் செல்ல முடியாத பற்றைகாட்டுக்குள் சடலம் வீசப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிவது.

கொடிகாமம் காவல்துறையினர் விசாரணையை நடத்தி வருகின்றனர். (இ-117-13)

## பூநகரியில் ஒக்ஸ்பாம் உதவி

கிளிநொச்சி, ஜன. 4

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மேட்டுநில விவசாயிகளுக்கு ''ஒக்ஸ்பாம்'' நிறுவனம் சிறுதானிய உள்ளீடுகளை விநியோகித்து வருகின்றது.

இதனால் 630 விவசாயிகள் நன்மையடைந்துள்ளனர். (இ-90)

## சைக்கிள் ரியூப் ஒட்ட 20 ரூபா

கைதடி, ஜன. 4

சைக்கிள் ரியூப் ஒட்டுவதற்கான கட்டணம் 15 ரூபாவிலிருந்து 20 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

''சொலிசன்'' விலை அதிகரிப்பும் தட்டுப்பாடுமே காரணம் என சைக்கிள் கடை உரிமையாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றபோதிலும், இக்கட்டண அதிகரிப்பு அளவுக்கதிகமானது என விமர்சிக்கப்படுகிறது. (இ-154)

# கொடும்பாவிகள் எரிப்பு

எழுதுமட்டுவாள், ஜன. 4

ஜனாதிபதி சந்திரிகா, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த, இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஆகியோரின் கொடும்பாவிகள் செவ்வாய்க்கிழமையன்று எழுதுமட்டுவாள் சந்தையடியில் எரிக்கப்பட்டன.

முன்னதாக சந்திரிகா, ரத்வத்த, நரசிம்மராவ் ஆகியோரது கொடும்பாவிகள் மருதங்குளம் சீலன்வீதியிலுள்ள மோகன் பாலர்பாடசாலை முன்றலில் தொங்கவிடப்பட்டு அங்கிருந்து ஒப்பாரி சகிதம் வீதியில் இழுத்துவரப்பட்டன.

இதேசமயம் கரம்பகம் வித்தியாலய முன்றலில் இருந்து பறைமேள முழக்கத்துடன் எடுத்து வரப்பட்ட ஜெயலலிதாவின் கொடும்பாவி ஒட்டுவெளியில் சந்திரிகாவின் கொடும்பாவி இழுத்துவரப்பட்ட ஊர்வலத்துடன் இணைந்து கொண்டது.

இறுதியில் அனைத்துக் கொடும்பாவிகளும் எழுதுமட்டுவாள் சந்தையடிக்கு எடுத்து வரப்பட்டு அங்கு எரியூட்டப்பட்டன. இதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் தீமூட்டித்தற்கொலை செய்து கொண்ட மாணவன் அப்துல் ரஹ்மானுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-111)

தமிழ்/ஆங்கில தட்டச்சு வேலைகளை அவசரமாகச் செய்ய வேண்டுமா?

சிரமப் படாதீர்கள்.

குறித்த நேரத்தில், சிறந்த முறையில் அவ்வேலைகளை நாம் செய்து தருவோம்.

★ றோணியோ தட்டச்சு வேலைகளையும் நாம் பொறுப்பேற்கிறோம்.

உதயன்
கிளை நிலையம்
சாவகச்சேரி

இல 9, மேல்மாடி,
நவீன சந்தை, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஆதரவு வலுக்கட்டும்

ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்து வரும் ஸ்ரீலங்கா அரசின் இனவாத நடவடிக்கைகளுக்கு தார்மீக உதவிகளையும், கடல்வழிக் காப்பு, ஆயுத உதவி ஆகியவற்றையும் வழங்கக்கூடாது.

கடந்த வார இறுதியில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டில், இந்திய மத்திய அரசை மேற்கண்டவாறு கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

சமாதானத்தை ஈட்டுவதற்காகவே தாம் வடக்கு-கிழக்கில் போரை நடத்துவதாகக் கூறிக்கொண்டு—

தமிழர்களை இனப்படுகொலை செய்வதிலேயே சந்திரிகா அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதாகச் சொல்லிக்கொண்டு இராணுவத்தீர்வையே நாடிநிற்கிறது.

ஆயினும் தான் சொல்வதையே செய்வதாக உலக நாடுகளை நம்ப வைப்பதில் சந்திரிகா சாதுரியமாக நடந்து கொள்கிறார்.

இந்த வகையில் இந்திய மத்திய அரசாங்கத்தை தனது ''கைக்குள் போட்டுக்கொண்டு'' அதன் ''ஆசி''யுடனும் உதவியுடனும் தமிழர் படுகொலைகளையும் அவர்களுக்கு விரோதமான நடவடிக்கைகளையும் சந்திரிகா மேற்கொண்டு வருகிறார்.

இத்தகைய ஒரு பின்னணியில் இந்திய மத்திய அரசாங்கம் ஈழத் தமிழர்களுக்கு எதிரான போக்கையே கடைப்பிடித்தது; கடைப்பிடிக்கிறது.

ஸ்ரீலங்காப் படைகளின் இராணுவ நடவடிக்கைகளின் போது, அப்பாவித்தமிழ் மக்களே பெரும் எண்ணிக்கையின் கொல்லப்பட்டார்கள் என்பது இந்திய அரசாங்கத்துக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால் அதனைக் கண்டு கொள்ளாதது போல, தெரிந்தும் தெரியாதது போல, கொழும்பு அரசாங்கத்தையே ஆதரித்து நிற்கிறது.

அது மட்டுமன்று. தமிழகத்தில் ஈழத்தமிழருக்கு ஆதரவான குரல் எழுவதைத் தடுப்பதிலும் மத்திய அரசு மிகத்தீவிரமாகச் செயற்பட்டது. தனது அதிகாரத்தையும், வளத்தயுமை அதற்காகப் பெருமளவில் செலவிட்டது.

எனினும் இது விடயத்தில் தமிழ் மக்களின் சகோதர உணர்வையும், இரத்த பாசத்தையும் வென்று விட முடியவில்லை.

இந்திய மத்திய அரசு தனது போக்கை மாற்றுவதற்கு நிர்ப்பந்தம் கொடுக்கும் அளவுக்கு தமிழகத்தில் ஈழத்தமிழருக்கு ஆதரவான நிலைவலுப்பெற்று வருகிறது.

இந்த ஆதரவுக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் நன்றி தெரிவித்து எழுதிய செய்தி ஸ்ரீலங்கா அரசின் உண்மையான கொடிய வடிவத்தை, அதன் அநியாயத்தை வெளி உலகத்துக்கு தெளிவாக்குகிறது.

தமிழக மக்கள் எமக்கு ஆதரவாகத் கொடுக்கும் குரல், ஸ்ரீலங்கா அரசுக்கு ஓர் எச்சரிக்கையாக அமையும். எமது உறுதியையும் பலப்படுத்தும். அந்த ஆதரவு இந்திய மத்திய அரசு தனது போக்கை மாற்றி, தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்க கொழும்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் அளவுக்கு மென்மேலும் வளர வேண்டும்; வலுவடைய வேண்டும்.

# ஐ. தே. கட்சியின் ஆட்சியிலிருந்த 2 மாகாண சபைகள் கலைப்பு

கொழும்பு, ஜன. 4

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழ் இருந்த வடமத்திய மாகாண சபையும், சப்பிரகமு மாகாண சபையும் கலைக்கப்பட்டுள்ளன.

இந்த மாகாண சபைகளின் ஆளுநர்கள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இதனை அறிவித்துள்ளனர்.

இந்த இரு மாகாண சபைகளுக்குமான தேர்தல் கூடிய விரைவில் நடத்தப்படும் என்று உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

அதுவரை மாகாண சபையின் நிர்வாகம் ஆளுநரின் பணிப்புக்கு அமைய செயற்படும். [இ-3]

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 4

''ரெலிகொம்'' நிறுவனத்தை தனியார் மயப்படுத்துவதைக் கண்டித்து ஊழியர்கள் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தினர். (இ-3 6)

## பொத்துவிலில் வெள்ளம் 7,300 பேர் வீடிழப்பு

கொழும்பு, ஜன. 4

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பகுதியில் கடும் வெள்ளப் பெருக்கால் 7 ஆயிரத்து 300 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அவர்கள் பாடசாலைகள், அரச கட்டடங்களில் தங்கியுள்ளனர். (இ-3)

# இலவச பாடநூல்கள் மேலும் தாமதமாகும்

பருத்தித்துறை, ஜன. 4

யாழ். மாவட்ட மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் இம்முறை கிடைப்பதில் மேலும் தாமதமேற்படலாம்.

அதனால் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆண்டிறுதிப் பரீட்சை முடிவடைந்ததும். பழைய (1995 இல் வழங்கப்பட்ட) பாடநூல்களை மீளப்பெற்று களஞ்சியப்படுத்த வேண்டும் எனவும்—

சென்ற ஆண்டு வழங்கப்பட்ட இலவச பாடநூல்களைக் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காவது பயன்படுத்தக்கூடிய வகையில் வகுப்பாசிரியர்களும் அதிபர்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும்—

இலவச பாடநூல்களைப் பற்றிய முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இப் பதிவேடுகள் ஒழுங்காகப் பேணப்படாத விடத்து அதிபர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்—

மேலும் பயன்படுத்த முடியாத நூல்கள் இருப்பின் அவற்றை அதிபர், ஆசிரியர்கள் அடங்கிய சபை ஒன்றினால் ஏல விற்பனை மூலம் விற்று பணத்தை அரச நிதியில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்—

ஏல விற்பனை நடைபெறும் திகதியை முன்கூட்டியே கோட்டக்கல்வி அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும் எனவும் — வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி பணித்துள்ளார்.

# இடம்பெயர்ந்தோருக்கு கிளிநொச்சியில் வீடுகள்

## தொண்டர் நிறுவனம் அமைக்கும்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்காக கிளிநொச்சி சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனம் 500 வீடுகளைக் கொண்ட புதிய வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக உடையார்கட்டுப் பகுதியில் 100 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து ஏனைய வீடுகள் உடையார் கட்டு தெற்கு, சுதந்திரபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ளதாக மேற்படி நிறுவனத்தினர் தெரிவித்தார்கள். (இ-10)

# காவிரி நீர்ப் பிரச்சினை: 3 அம்ச இடைக்காலத் தீர்வு

புதுடில்லி, ஜன. 4

காவிரி ஆற்று நீர்ப் பிரச்சினைக்கு 3 அம்ச இடைக்காலத் தீர்வொன்றை இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அறிவித்துள்ளார்.

இதன்படி தமிழ்நாட்டுக்கு உடனடியாகத் தற்காலிக அடிப்படையில் 600 கோடி கன அடி தண்ணீரை விடுவிக்குமாறு கர்நாடக அரசு கேட்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அறுவடையாகும் நிலையில் உள்ள பயிர்களைக் காப்பாற்றுவதோடு கர்நாடகத்தின் தண்ணீர் அளவின் தேவையையும் தான் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது என்று பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்தார்.

நீர்மட்ட நிலை குறித்தும் பயிர் பாதுகாப்பிற்குத் தேவையான தண்ணீர் அளவு குறித்தும் தமிழ்நாடும், கர்நாடகமும் தெரிவிக்கும் தகவல்களை ஆராய 3 உறுப்பினர் குழுவை பிரதமர் நியமித்துள்ளார். இந்த மாதம் 10 ஆம் திகதி இந்தக் குழு தனது பணியை நிறைவேற்றும்.

# நரசிம்மராவின் தீர்ப்பை தமிழ்நாடு ஏற்றது

சென்னை, ஜன. 4

காவிரிப் பிரச்சினையில் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் அறிவித்த முடிவை, தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் ஆட்சேபத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் நடந்த அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தமிழ்நாடு விவசாயிகளின் நலன் கருதி சட்ட நிபுணர்களின் ஆலோசனைக்கு இணங்க நடுவன் மன்றத்திலும் உச்ச நீதி மன்றத்திலும் மனு ஒன்றைத் தாக்கல் செய்வது என்றும் தமிழ்நாடு அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (இ-3)

# பூநகரியில் கெயர் அபிவிருத்தி வேலைகள்

கிளிநொச்சி, ஜன. 4

கெயர் ஸ்தாபனத்தின் உதவியுடன், பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம், பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 3 குளங்களை புனர் நிர்மாணம் செய்துள்ளது.

பத்தினிப்பாய்குள அணைக்கட்டு வேலை ஐந்தரை லட்சம் ரூபா செலவிலும் —

முட்கொம்பன் குள அணைக்கட்டு மூன்றரை லட்சம் ரூபா செலவிலும் —

திக்குவில் குள அணைக்கட்டு 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவிலும், — புனரமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஜெயபுரம் பிரதேசத்தில் 100 கிணறுகளும் கெயர் ஸ்தாபனத்தால் ஆழமாக்கப்பட்டு விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

கெயர் ஸ்தாபனம் கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாரிய வேலைத்திட்டங்களை செய்துவருவது குறிப்பிடத்தக்கது. (இ-90)

## இளைஞர் காயம்

வெற்று துப்பாக்கி ரவைக்குள் தீக்குச்சி மருந்தைப் போட்டு வெடிக்க வைத்த இளைஞர் ஒருவர் கையில் பலத்த காயத்துடன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஏழாலையில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது மீசாலை வடக்கில் தங்கி உள்ள சந்திரசேரன் சுதர்சன் (வயது 18) என்பவரே காயம் அடைந்தவராவார். (இ-13

# நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியின் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 5 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதருமாறு நிதித்துறை அறிவித்துள்ளது.

★ திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை — 'தியாகி சிவகுமாரன் இல்லம்' (ராஜவனம்) உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

★ பொன்னுத்துரை அரியரெட்ணம் — நகர சபை உத்தியோகத்தர், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

★ திருமதி சிவகுமாரி சாண்கந்தையா — ''செல்வபதி'' மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம்

★ பொன்னுத்துரை சிவனேசன் — ''சிவரூபி'' வாரம்பத்தை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்

★ முத்துலிங்கம் மோகன் — 83 றங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்/ பருத்தியடைப்பு ஊர்காவற்துறை

★ சோதி இராசநாயகம் — அம்மன் கோவிலடி, உரும்பிராய்

★ திருமதி மகாதேவி கந்தையா (ஆசிரியை) — நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர்

★ கணேஸ் பாக்கியநாதன் — கெருடாவில் கந்தசாமி கோவில், சாவகச்சேரி

★ ஆறுமுகம் கணேசலிங்கம்— சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில் கிழக்கு, சுன்னாகம்

★ நாகலிங்கம் ராஜேந்திரம் அல்லது பொன்னுத்துரை (முன்னாள் பஸ் நடத்துனர்) — மே/பா செல்வி ராஜேஸ்வரி ராஜேந்திரம், மீசாலை வடக்கு, மீசாலை

★ ராஜதுரை ராஜேஸ்வரன் — பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

★ கைலாசப்பிள்ளை சோதிலிங்கம் — ஐயனார் லேன், சண்டிலிப்பாய்

★ குட்டித்தம்பி திருநாவுக்கரசு — நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்

★ திருமதி கதிராசி மாணிக்கம் அல்லது செல்வி சரிமிளா மாணிக்கம் = R. D. S. வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

★ வல்லிபுரம் நடராசா (ஆசிரியர்) அல்லது செல்வராணி நடராசா— 44, கலைமகள் வீதி, (புதிய இலக்கம் 106) அரியாலை, யாழ்ப்பாணம்

★ தவமணி சக்திவேல் — 29/6 புகையிரத நிலைய வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ திருமதி சின்னம்மா வேலுப்பிள்ளை — சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்

★ வி. மகாலிங்கம் — கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்

★ த. சந்தானலட்சுமி— 106, செம்மணி றோட் நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம்

★ தம்பிப்பிள்ளை சின்னத்துரை — 208, 6 ஆம் குறுக்குத்தெரு, மணியந்தோட்டம், கொழும்புத்துறை

★ சுந்தரம்பிள்ளை பவளமணி — கொந்துக்கட்டி வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்

★ கந்தையா சிவலிங்கம்— வேம்படி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்

★ கந்தையா கணேசபிள்ளை — நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

(இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பருத்தித்துறையில் "உதயன்"

பணிமனை திறந்து பணியாற்றுவதை

**வாழ்த்துகின்றோம்**

வடமராட்சியில் 50 ஆண்டுகளுக்கு மேலாக புகைப்படக்கலையில் சிறந்த முன்னோடியாக விளங்குபவர்கள்

**குகன் ஸ்ருடியோ**

பருத்தித்துறை

(40058)



பருத்தித்துறை நகர் பொலிவுற ஆரம்பிக்கும்

**"உதயன்"**

**பணிமனை**

சிறப்புற வாழ்த்தும்

**குமார் அச்சகம்**

சிவன் வீதி, பருத்தித்துறை

வடமராட்சியில் 38 வருட அச்சுக் கலை முன்னோடிகள் துரித கதியில் - சிறந்த முறையில் அழகான வடிவமைப்பில் அச்சு வேலைகளுக்கு சிறந்த தாபனம்

(40051)


உ

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் யுவ வருடம் மார்கழித் திங்கள் 12ஆம் நாள் புதன்கிழமை (27-12-1995) பகல் இறைவனடி இணைந்த எமது பாசமிகு தந்தை.

**பிரம்மஸ்ரீ கு. சாம்பசிவசர்மா**

(பளை ஐயா) அவர்களின்

| | |
|---|---|
| தசாகம் | 5-1-1996 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் |
| ஏகோதிஷ்டம் | 6-1-1996 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் |
| சபிண்டீகரணம் | 7-1-1996 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் |
| கிருஹயக்ஞம் | 8-1-1996 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கும் |

நடைபெற இருப்பதனால் அத்தருணம் தங்கள் அனைவரையும் இக்கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:

**மனைவி, மக்கள், மருமககள்.**

தகவல்:
சப்பச்சிமாவடி,
சாவகச்சேரி.

(49906)

# கண்ணீர் அஞ்சலி

செம்பியன்பற்றுப் பங்கின் முதற்கனியும், அன்னை வயிற்றில் அமர்ந்து நாவாகி ஐயிரண்டு திங்கள் காலம் குருத்துவப் பணி புரிந்து பொதுநிலையினர் பலரின் கண்ணிலும் கருத்திலும் நிலையான இடம்பெற்று மீட்பின் குரல் கேட்டு படைத்தோன் கரத்தில் தன் ஆன்மாவை ஒப்படைத்த

அருட்திரு

**கஸ்பார் ஜோண் லொறெற்**

அடிகளாரின்

ஆன்மா வான்வீட்டில் நித்திய பேரின்பப் பெருவாழ்வு பெற்று மகிழ்ந்திடவும், அன்னாரின் பேரிழப்பால் அல்லலுறும் குடும்பத்தினர், உறவினருக்கும் செம்பியன்பற்றுப் பங்குவாழ் மக்களுக்கும் இறையருள் இறைஞ்சி எங்கள் கண்ணீர் அஞ்சலிகளை அர்ப்பணிக்கின்றோம்.

உங்கள் துயரத்தில் இணைந்து நிற்கும்
பங்குத் தந்தையும்
பங்கு மக்களும்

கரவெட்டி. (C/3016)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 04-01-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

# தமிழ் கட்சிகள் ஒருமித்து வலியுறுத்தும்

கொழும்பு, ஜன. 4

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த பூரண சுயாட்சி உரிமையுள்ள அலகை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக நாடாளுமன்ற தெரிவுக் குழுவிடம் வற்புறுத்துவதற்காக தமிழ் அரசியல் கட்சிகள் நடவடிக்கை எடுக்கின்றன.

தமிழ் கட்சிகள் தமது நிலைப்பாட்டை ஒன்றாக வற்புறுத்துவதற்காக எல்லாக் கட்சிகளையும் ஒன்று படுத்த நடவடிக்கை எடுப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ். கூறியுள்ளது.

இந்த முயற்சியில், முதல் கட்டப் பேச்சுக்களில் ஈ. பி. ஆர். எல். எவ்., புளொட், ரெலோ, ஈரோஸ் ஆகிய கட்சிகள் கலந்து கொண்டன.

(இ-3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாரிமுத்து தம்பையா

(கந்தர்மடம்)

கந்தர்மடம், குமாரசாமி வீதி, இல. 7, 'செந்தாமரை' என்னும் இல்லத்தில் வசித்த திருமதி மாரிமுத்து தம்பையா நேற்று (3-1-96) அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தர்மடத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - தெய்வானை தம்பதியரின் மூத்தமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பையாவின் அன்பு மனைவியும், சிவசுப்பிரமணியம், திருமதி கனகம்மா, கனகசபை (இளைப்பாறிய சிறாப்பர், யாழ். மாநகர சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பாக்கியம் தம்பையாவின் (பளை) சிறிய தாயாரும், பூபதி, தெல்லியூர் நடராசா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்போதைய வதிவிடத்தில் (03-01-96) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
த. கனகசபை (மகன்)
தற்போதைய முகவரி:-
மே/பா.
வீ. பொ. ஐயாத்தம்பி
கரும்பி மாவடி முருகன் கோவிலடி,
மீசாலை மேற்கு,
மீசாலை. (39787)

### திருமதி செல்லாச்சி சுப்பையா

நுணாவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சுப்பையா (நுணாவில்)வின் மனைவி திருமதி செல்லாச்சி சுப்பையா 3-1-96 காலை சிவபதமடைந்தார்.

இவரின் ஈமைக் கிரியைகள் நுணாவில் மேற்கில் அத்தினத்தில் நடைபெற்றன என உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
சு. தம்பித்துரை
(மகன்)
நொதேன் மோட்டோவேக்ஸ்
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்
கோண்டாவில் (39788)


குழந்தை யேசு திருநாள்

14-01-96 ஞாயிற்றுக் கிழமை

**பரலோக அன்னை ஆலயம்**

கரவெட்டி

★ 04-01-96 வியாழன் முதல் 10-01-96 புதன் வரை மாலை 4.30 மணிக்கு நவநாள் வழிபாடுகள்
★ 11-01-96 முதல் 13-01-96 வரை மாலை 4.30 மணிக்கு நவநாள் வழிபாடும் திருப்பலியும்
★ 13-01-96 சனி நற்கருணை விழா
★ 14-01-96 ஞாயிறு காலை 7 மணி திருநாள் திருப்பலி

குழந்தை யேசு அருள் பெற வருக!

பங்குத்தந்தையும்
பங்குமக்களும்

(சி-3017)


உயிராய்...... உணர்வாய்..... தமிழ்
உதிரத்தின் உடன் பிறப்பே
முகம் தெரியாத சோதரனே

உன் முகம் நாமறியோம்
உன் உணர்வு தாம் அறிந்தோம்
உணர்வோடு உரிமைக்காய் உறுதியோடு
வாழுகின்றோம்
தமிழே உன் உயிரென்றாய்
தமிழீழத்திற்காய் உனையிந்தாய்
தன்னொளி போலெங்கள் மனத்தனிலே
குளிர்கின்றாய்
தமிழீழ மக்களெம் மனத்தனிலே வீற்றிருப்பாய்
எரியுண்டு போனது உன்னுடல்
தலை நிமிர்ந்து நாம் நிற்போம் இது உறுதி.

பருத்தித்துறை வணிகர் கழகம்

(40053)

# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி சின்னராசா

வேலணை கிழக்கு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி நுணாவில் கிழக்கு, கல்வயலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சின்னராசா அவர்கள் 3-1-96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நல்லதம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், விஜயலட்சுமி (சுவிஸ்), திருவிளங்கம் (55, வைமன் றோட், நல்லூர்), திருச்செல்வம் (சுவிஸ்), திருக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சாந்தலிங்கம் (சுவிஸ்), வரதலட்சுமி, தேவராணி (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ்சென்ற நமசிவாயம், அன்னலட்சுமி, காலஞ்சென்ற சேனாதிராசா, இராசலட்சுமி, சரஸ்வதி, பாக்கியலட்சுமி ஆகியோரின் சகோதரரும், சிவப்பிரகாசம், தேவராசா (இளைப்பாறிய விவசாய விரிவாக்க சேவையாளர்), பாக்கியலட்சுமி, நகுலேஸ்வரி (லீலா) ஆகியோரின் மைத்துனரும், காஞ்சிபன் (சுவிஸ்), கபிலன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), கார்த்திகா, நிருத்திகா, கவுசிகா (மாணவிகள் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சிந்தூரி (சுவிஸ்)ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (4-1-96) வியாழக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரின் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
சி. திருவிளங்கம்
(மகன்)

செல்வராசா மாமா வீதி,
நுணாவில் கிழக்கு,
கல்வயல், சாவகச்சேரி. (39789)

## சரவணமுத்து கந்தசாமி

(இளைப்பாறிய ஆசிரியர்)

குழானை சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், தற்போது மறவன்புலோவை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கந்தசாமி (வித்துவான்) 03-01-1996 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு/திருமதி சரவணமுத்து மாணிக்கத்தின் அன்பு மகனும், சரஸ்வதி, சிவக்கொழுந்து, அன்னலட்சுமி, சின்னத்துரை (உதவி விவசாயப் பணிப்பாளர் A. D. A.), காலஞ்சென்ற இராசதுரை, அன்னபூரணம், ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (4-1-96) பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. சின்னத்துரை (சகோதரன்)

தற்போதைய முகவரி:-
C/o இ. சட்டநாதர்,
மறவன்புலோ,
சாவகச்சேரி. (39790)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org